**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி திங்கள் 31–ம் நாள்

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ம் நாள் செவ்வாய்க்கிழமை

******

**இடைமனு எண்.4/2025–ல் அசல் வழக்கு எண். 140/2018**

சுப்பிரமணியன் ... மனுதாரர்/வாதி

**...எதிர்...**

1.வட்டாட்சியர், சீர்காழி
2.மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டிணம்
3.கிருஷ்ணமூர்த்தி (இறந்தார்)
4.முத்துகுமார்
5. ஜெயகுமார் (unsound mind - represented by mother D6 as guardian)
6.ராஜம் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 09.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு R.வேணுகோபாலன் அவர்களும், 1 மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு E.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிர்மனுதாரர் இறந்த நிலையில், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் 5–ம் பிரதிவாதி unsound mind என்பதனால் அவருக்கு அவரது தாயாரை (6ம் பிரதிவாதியை) கார்டியனாக நியமனம் செய்து

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.16 17:09:04 +0530

உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–32, விதி–3 மற்றும் பிரிவு 151 –ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகளின் மேல் தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மனுதாரர்/வாதிக்கு வழங்கப்பட்ட UDR பட்டா மற்றும் வரைபடத்தில், 1ம் பிரதிவாதி 23 சென்ட் என்பதற்கு பதிலாக 19 சென்ட் என தவறுதலாக குறிப்பிட்டிருப்பதை திருத்தம் செய்யவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மேற்படி வழக்கில் 5ம் பிரதிவாதி unsound mind என்பதனால் அவருக்கு அவரது தாயாரை (6ம் பிரதிவாதியை) கார்டியனாக நியமனம் செய்து வழக்கை மேல் நடத்த வேண்டிது மிகவும் அவசியமும் நியாயமுமாய் உள்ளது, இல்லையேல் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்படும். எனவே அசல் வழக்கில் 5–ம் பிரதிவாதி unsound mind என்பதனால் அவருக்கு அவரது தாயாரை (6ம் பிரதிவாதியை) கார்டியனாக நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

**3.** மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

**4.** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.16 17:09:10 +0530

**5. தீர்வு**

**இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(i) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகளின் மேல் தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மனுதாரர்/வாதிக்கு வழங்கப்பட்ட UDR பட்டா மற்றும் வரைபடத்தில், 1ம் பிரதிவாதி 23 சென்ட் என்பதற்கு பதிலாக 19 சென்ட் என தவறுதலாக குறிப்பிட்டிருப்பதை திருத்தம் செய்யவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 5-ம் பிரதிவாதி unsound mind என்பதனால் அவருக்கு அவரது தாயாரை (6ம் பிரதிவாதியை) கார்டியனாக நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.16 17:09:16 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.16 17:09:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சி</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.16 17:09:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.4/2025–ல்
அசல் வழக்கு எண். 140/2018
நாள்.16.09.2025.